# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.6/2019

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கோவிந்தராஜ் | மதம் | : இந்து |
| த/பெ | : முனுசாமி | ஜாதி | : -- |
| வயது | : 65 | கிராமம் | : செருக்கனூர் |
| தொழில் | : மாடு வளர்ப்பு | வட்டம் | : திருத்தணி |

**20.11.2025**
**பி.வா.சா. 3 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பு 3ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**<u>குறுக்கு விசாரணை வாதி தரப்பில்</u>**

1. நான் செருக்கனூர் பழைய காலனியில் வசிக்கிறேன் என்றால் சரிதான். அதே பழைய காலனியில்தான் கன்னியப்பன் அவருடைய மகன் சின்னராஜா குடும்பத்துடன் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். கன்னியப்பன் அவரின் மனைவி தேவி பெருமாள் கோவில் தெருவில்தான் சமையல் செய்து வசித்து வருகிறார்கள் என்றால் புதுவீட்டில் வசிக்கிறார்கள். புதுவீடு எங்கு உள்ளது என்றால் 1982ல் எம்.ஜி.ஆர் கொடுத்த இடம் ஆகும். அந்த வீட்டு எண், தெரு பெயர் தெரியுமா என்றால் தெரியாது. கன்னியப்பனின் புது வீட்டின் நான்கு புறம் தெரியுமா என்றால் கிழக்கே ஜெயசீலன், மேற்கே மூர்த்தியின் தம்பி வீடு, வடக்கே முருகன், தெற்கே பூபாலன் ஆகியோர் உள்ளார்கள்.

2. நான் மேற்சொன்ன நான்கு எல்லை உள்ள தெரு பெயர் தெரியுமா

என்றால் தெரு பெயர் தெரியாது. அந்த சொத்தின் புல எண், மனை எண் தெரியுமா என்றால் 106 ஆகும். சதாசிவம் புதிய காலனியில் வசிக்கிறார் என்றால் 5 வீடு தள்ளி புது வீடு கட்டியுள்ளார். சதாசிவத்தின் வீட்டிற்கு நான்கு புறம் யார் உள்ளார்கள் என்றால் தெரியாது. அக்ரஹாரம் செல்லும் பிரதான சாலையில் ஓரமாக கட்டி வைத்துள்ளார். அந்த தெரு பெயர் தெரியுமா என்றால் தெரியாது. கன்னியப்பன் முதியோர் தொகை வாங்குகிறார் என்றால் ஆமாம். அதேபோல் குடும்ப அட்டையில் பொருட்கள் வாங்குகிறார் என்றால் ஆமாம். அவை அனைத்தும் பழைய காலனியில் நான் வாங்கும் இடத்தில்தான் வாங்குகிறார் என்றால் சரிதான்.

3. கன்னியப்பன் புதிதாக என்ன வீடு கட்டியுள்ளார் என்றால் குடிசை வீடுதான் கட்டியுள்ளார். சதாசிவத்தின் குடிசை வீடு எரிந்த போது ஏதேனும் உயிர் சேதம் நடந்ததா என்றால் எனக்கு தெரியாது. நான் அந்த சமயம் ஊரில் இல்லையா என்றால் எனது பழைய காலனி ஊர் கடைசியில் உள்ளது. சதாசிவத்தின் வீடு எரிந்தபோது வருவாய் துறையினர் மற்றும் காவல் துறையினர் வந்து விசாரித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது தெரியுமா என்றால் தெரியாது. சாட்சி சொல்வதற்கு என்னை யார் அழைத்தார்கள் என்றால் கன்னியப்பன் மகன் சின்னராஜ் அழைத்து வந்தார். சின்னராஜ் எனக்கு என்ன உறவு என்றால் பங்காளி, சித்தப்பா மகன் ஆவார். கன்னியப்பன் பங்காளி முறையில் எனக்கு நெருங்கிய உறவினர் என்றால் சரிதான்.

4. வழக்கை சதாசிவம் யார் மீது தாக்கல் செய்துள்ளார் என்பது தெரியுமா என்றால் தெரியாது. சதாசிவம் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் மனை எண்.26ல்தான் சதாசிவம் வசித்து வருகிறார் என்றால் தெரியாது. வழக்கு சொத்தில்தான் சதாசிவம் வசித்து வருகிறார் என்றாலும் அந்த சொத்தில் குடிசை வீடு கட்டி வசித்து வரும்போது தீ விபத்து ஏற்பட்டு சதாசிவத்தின் மகள் இறந்துவிட்டார் என்றாலும் சரிதான். குடிசை எரிந்த இடத்தில்தான் சதாசிவம் தற்போது குடிசை வீடு கட்டி ஆடு, மாடு வைத்து வசித்து வருகிறார் என்றால் இல்லை. மாடி வீட்டில் வசித்து வருகிறார்.

5. நான் சொல்வது பொய் என்றாலும் சதாசிவம் வழக்கு சொத்தில் உள்ள குடிசை வீட்டில்தான் வசித்து வருகிறார்கள் என்றால் இல்லை. சதாசிவம் வழக்கு சொத்தில் உள்ள குடிசை வீட்டில்தான் வசித்து வருகிறார்கள் என்று கன்னியப்பன் இந்த வழக்கில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை

சதாசிவம்தான் வழக்கு சொத்தில் வசித்து வருகிறார் என்றாலும் இது குறித்து பிரச்சனை ஆகி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றாலும் எனக்கு அதை பற்றி தெரியாது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)